குன்னம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மேனாள் அமைச்சர், அரியலூர் மாவட்ட கழக செயலாளர் குன்னம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.சிவசங்கர் தமது தொகுதிக்கு உட்பட்ட செந்துறை ஒன்றியம் கோட்டைக்காடு, ஆலத்தியூர், தெத்தேரி, முள்ளக்குறிச்சி, ஆதனக்குறிச்சி, புதுப்பாளையம், தாமரைப்பூண்டி, மணக்குடையான், மதுரா நகர், செங்கமேடு தளவாய், கூடலூர், ஈச்சங்காடு, சேந்தமங்கலம், சிலப்பனூர், பழைய அங்கனூர், அங்கனூர், சிவராமபுரம், சன்னாசி நல்லூர், குழுமூர், நல்லநாயகபுரம், பெருமாண்டி, வஞ்சனாபுரம், சித்துடையார், உகந்தநாயகன் குடிகாடு, நத்தக்குழி, மனப்பத்தூர், சோழங் குடிகாடு, நந்தியன் குடிகாடு, அயன் தத்தனூர், படைவெட்டி குடிகாடு, வங்காரம் உள்ளிட்ட கிராமங்களில் வீதி வீதியாகச் சென்று வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி கூறினார், பொதுமக்கள், கழக நிர்வாகிகள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர். உடன் ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் வி.எழில்மாறன், வழக்கறிஞர் பொன்.செல்வம், தேமுதிக ஒன்றிய செயலாளர் செல்வராஜ், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

அ.தி.மு.க. பிளவு கோஷ்டிக்கு அமைச்சரவையில் இடம் இல்லை!

பதவி வெறியில் த.வெ.க.வை ஆதரித்த 25 எம்.எல்.ஏ.க்களுக்கு ஏமாற்றம்!

எம்.எல்.ஏ.க்களின் ஆசை, நிராசையானது!

சென்னை, மே 23- அமைச்சரவையில் இடம் அளிக்க தவெக மறுத்துவிட்டதால், அதிமுகவின் சி.வி.சண்முகம், எஸ்.பி.வேலுமணி கூடாரம் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளது. அமைச்சராகிவிடலாம் என்ற அதிமுக அதிருப்தி எம்எல்ஏக்களின் ஆசை, நிராசையாகிவிட்டது..

தனிப்பெரும்பான்மை இல்லாத தவெக அரசுக்கு ஆதரவு அளித்ததன் மூலம், அதிமுகவின் சி.வி.சண்முகம் மற்றும் எஸ்.பி.வேலுமணி தலைமையிலான எம்.எல்.ஏக்கள், அரசை எதிர்த்து வாக்களித்த எடப்பாடி பழனிசாமி தலைமையிலான எம்.எல்.ஏக்கள் என அதிமுக தற்போது இரண்டு கோஷ்டிகளாகப் பிளவுபட்டுள்ளது. அண்மையில், சட்டப்பேரவையில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில், எடப்பாடி பழனிசாமியின் உத்தரவை மீறி, சி.வி.சண்முகம், எஸ்.பி.வேலுமணி தலைமையிலான 25 அதிமுக எம்.எல்.ஏக்கள் தவெக அரசுக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதன் காரணமாக அவர்கள் அதிமுகவில் வகித்து வந்த பொறுப்புகளில் இருந்து நீக்கப்பட்டனர். கட்சியின் கொறடா உத்தரவை மீறி தவெக அரசுக்கு ஆதரவாக வாக்களித்த 25 எம்.எல்.ஏக்களையும் தகுதி நீக்கம் செய்யக் கோரி எடப்பாடி பழனிசாமி தரப்பு, சபாநாயகரிடம் மனு அளித்துள்ளது. நீதிமன்றத்தில் வழக்கு தொடரவும் பழனிசாமி தரப்பு முடிவு செய்துள்ளது.

தவெக அரசுக்கு ஆதரவு அளிக்க அதிமுக தரப்புக்கு தரப்புக்கு 8 அமைச்சர்கள் மற்றும் வாரியத் தலைவர் பதவி என பேரம் பேசப்பட்டதாகவும், குதிரை பேரங்கள் நடைபெற்றதாகவும் தகவல்கள் வெளியாகின. அமைச்சரவை விரிவாக்கத்தின் போது தாங்கள் உட்பட அமைச்சராகி விடலாம் என ஆவலுடன் எதிருபார்த்திருந்த சி.வி.சண்முகம், எஸ்.பி.வேலுமணி தரப்புக்கு தற்போது பேரிடி இறங்கியுள்ளது.

பெட்ரோல், டீசல் விலை உயர்வைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

சென்னை, மே 23 - பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலையை உயர்த்தியதை கண்டித்து, வி.சி.க., கம்யூனிஸ்ட் கட்சிகள் சென்னை யில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலை உயர்வைக் கண்டித்து வி.சி.க. மற்றும் இடதுசாரிகள் கட்சிகள் நேற்று முன்தினம் வள்ளலார் நகர் பேருந்து நிலையம் அருகே கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு.வீர பாண்டியன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம், மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சி மாநில செயலாளர் பழ.ஆசைத்தம்பி, விசிக பொதுச்செயலாளர் ரவிக்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

போக்குவரத்து, அத்தியாவசிய பொருட்கள் விலை உயர்வுக்கு காரணமான பெட்ரோல், டீசல் விலை உயர்வை கைவிட வேண்டும். உணவகங்கள், சிறு தொழில்கள் மூட காரணமான வணிக சிலிண்டர் விலை உயர்வை கைவிட வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தினர்.

ஆர்ப்பாட்டத்துக்கு பின்னர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் பெ.சண்முகம் செய்தியாளர்களிடம் கூறுகையில், “5 நாட்கள் முன் பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்பட்டது.

நான்கு நாட்களுக்கு பிறகு விலை மேலும் உயர்த்தப்பட்டுள்ளது. ஏற்கெனவே, வணிக சிலிண்டர் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

இதுபோல் சென்று கொண்டிருந்தால் அடுத்த சில நாட்களில் வீட்டு உபயோக சிலிண்டர் விலையும் கடுமையாக உயர்த்தப்படும். வாழ முடியாத நெருக்கடிக்கு மக்களை பா.ஜ.க. அரசு தள்ளி உள்ளது.

பெட்ரோல், டீசல், எரிவாயு என்பது அத்தியாவசியமான பொருள். இதை அனைத்து மக்களுக்கும் குறைவான விலையிலும், தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கவும் பா.ஜ.க. அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றார்.

இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் வீர பாண்டியன் தனது உரையில், “பெட்ரோல், டீசல் எரிவாயு விலை உயர்வுக்கு முழுக்க முழுக்க மத்திய அரசும், பிரதமரும்தான் பொறுப்பு. இந்த நெருக்கடிக்கு மூல காரணம் அமெரிக்காவும், இஸ்ரேலும்தான்.

நம் நட்பு நாடு ஈரான் தங்கு தடை இல்லாமல் எரிவாயு கொடுத்து கொண்டிருந்தார்கள். அதன் அதிபரை கொன்று விட்டார் கள்.

செல்வந்தர்கள் தான் தேசவளங்களை கொள்ளை அடிக்கிறார்கள். பிரதமரின் அறிவுரை வேண்டுகோள் எல்லாம் அந்த பக்கம் திரும்ப வேண்டும். உழைக்கிற மக்கள் பக்கம் அல்ல” என்று கூறினர்.

விஜய்யை பற்றி தவறாகப் பேசியதாகக் கூறி ரகளை;

அபாயச் சங்கிலியை பிடித்து இழுத்து ரயிலை நிறுத்தி வாலிபர் அட்டகாசம்!

கற்களை வீசி கண்ணாடியை உடைத்தார்!

கண்ணமங்கலம், மே 23 - விஜய்யை பற்றி பயணிகள் தவறாக பேசியதாக கூறி கண்ணமங்கலம் அருகே அபாய சங்கிலியை இழுத்து ரயிலை நிறுத்தி இறங்கிய வாலிபர் கற்கள் வீசி ரயில் கண்ணாடியை உடைத்ததோடு, பயணிகளையும் தாக்கினார். இதனால் ரயில்வே கேட் மூடப்பட்டு அரை மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டு பரபரப்பாக காணப்பட்டது. புதுச்சேரியில் இருந்து ஹவுராவுக்கு நேற்றுமுன்தினம் சிறப்பு அதிவேக ரயில் புறப்பட்டது. நேற்று பிற்பகல் திருவண்ணா மலை போளூர் வழியாக கண்ணமங்கலம் அருகே ஒண்ணுபுரம் பகுதியில் திடீரென ரயில் நின்றது.

தொடர்ந்து ரயிலில் இருந்து சட்டை கூட அணியாமல், லுங்கியுடன் இறங்கிய வாலிபர் ரயில் மீதும், பயணிகள் மீதும் சரமாரியாக கற்களை வீசி தாக்கினார். இதில் ரயில் கண்ணாடி உடைந்தது. இதனால் ஹவுராவுக்கு செல்லும் எக்ஸ்பிரஸ் ரயில் ஒண்ணுபுரம் பகுதியில் சுமார் 20 நிமிடம் நின்றது. லோகோ பைலட் மற்றும் ரயில்வே அதிகாரிகள் சவந்து விசாரணை நடத்தினர். அதில் ரயில் மீதும், பயணிகள் மீதும் கற்களை வீசிய நபர் தான், அபாய சங்கிலியை இழுத்து ரயிலை நிறுத்தியது தெரியவந்தது. இதுபற்றி காட்பாடி ரயில்வே போலீசாருக்கு தகவல் அளிக்கப்பட்டது. ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த போலீசார் வந்து விசாரணை நடத்தினர்.

இதில் கல்வீசியவர் தர்மபுரியை சேர்ந்த ஜோசப் மணி என்றும் இவர் ஒரு தனியார் பேக்கரியில் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். திருவண்ணாமலை ரயில் நிலையத்தில் ரயிலில் ஏறியவுடன் சக பயணிகள் முதல்வர் விஜய்யை பற்றி தவறாக பேசிக்கொண்டிருந்ததால், ஆத்திரத்தில் இவ்வாறு செய்ததாக தெரிவித்துள்ளார். ஆனால் பயணிகள் அந்த வாலிபர் ரயிலில் ஏறியதும் தானாகவே பயணிகளை ஆபாசமாக பேசி ரகளையில் ஈடுபட்டு இது போன்று நடந்து கொண்டதாக தெரிவித்தனர். இதையடுத்து காட்பாடி ரயில்வே போலீசார் வழக்குப்பதிந்து ஜோசப் மணியை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதனால் 20 நிமிடம் தாமதமாக ரயில் புறப்பட்டு சென்றது. இதற்கிடையில் கண்ணமங்கலம் ரயில்வே கேட், காவல் நிலையம் அருகே உள்ள ரயில்வே கேட், கொங்கராம்பட்டு கேட் ஆகிய மூன்றும் வழக்கமான நேரத்திற்கு மூடப்பட்டது. அரை மணி நேரம் சிக்னல் கிடைக்காததால் கேட்டுகளை திறக்க முடியவில்லை. இதனால் வேலூர் திருவண்ணாமலை சாலையில் கண்ணமங்கலம் பஜார் வரை, வேலூர் ஆரணி சாலையில் டோல் கேட் வரை என் கண்ணமங்கலம் போலீஸ் ஸ்டேஷன் அருகே உள்ள ரயில்வே கேட்டின் இருபுறமும் ஒரு கி.மீ தூரத்திற்கு வாகனங்கள் வரிசை கட்டி நின்றது. இதனால் போக்குவரத்து அரை மணி நேரம் ஸ்தம்பித்தது. பின்னர் சிக்னல் கிடைத்ததால் கேட்டுகளை திறந்தனர்.

அமைச்சர் தொகுதியில் பள்ளி அருகே டாஸ்மாக்; மூடக்கோரி போஸ்டர்!

மதுரை, மே 23 - மதுரை அருகே திருப்பரங்குன்றம் தொகுதியில் தவெக சார்பில் போட்டியிட்ட நிர்மல்குமார் வெற்றி பெற்று மின்சாரம் மற்றும் சட்டத்துறை அமைச்சராக உள்ளார். இந்நிலையில் பள்ளி, கல்லூரிகள் மற்றும் வழிபாட்டு தலங்கள் அருகே யுள்ள 717 டாஸ்மாக் கடைகளை அகற்ற உத்தரவிடப்பட்டுள்ளது. அதே நேரம் மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் சுப்ரமணிய சுவாமி கோயிலுக்கு சொந்தமான பெண்கள் மேனிலைப் பள்ளியில் இருந்து 100 மீ தூரத்தில் டாஸ்மாக் கடை அமைந்துள்ளது.

பள்ளி மாணவிகள் இந்த டாஸ்மாக் கடையை கடந்து தான் செல்ல வேண்டியுள்ளது. இதேபோல், திருநகர் எம்எம் ஆண்கள் மேனிலைப்பள்ளியில் இருந்து 150 மீ தொலைவில் ஒரு டாஸ்மாக் கடை அமைந்துள்ளது. இதனால், மாணவ, மாணவியர் பாதிக்கும் சூழல் உள்ளதால், இந்த மதுக் கடைகளை அகற்ற வேண்டுமென்ற கோரிக்கை எழுந்துள்ளது. பள்ளிகளுக்கு அருகில் பெண் குழந்தைகளுக்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில் உள்ள டாஸ்மாக கடைகள் மூடப்படாமல், தற்போது வரை செயல்பட்டு வருகிறது.

இதுதொடர்பாக புதிதாக அமைச்சரான நிர்மல் குமாரை சந்தித்து அப்பகுதியினர் கோரிக்கை வைத்திருந்தனர். ஆனால், கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. இதையடுத்து திருப்பரங்குன்றம் சுற்றுவட்டார பொதுமக்கள் நலச்சங்கம் என்ற அமைப்பின் சார்பில், “திருப்பரங்குன்றம், திருநகர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பெண்கள் மற்றும் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அருகில் உள்ள மதுக்கடைகளை உடனே அகற்று. மாணவிகளின் பாதுகாப்பை உறுதி செய்” என்ற வாசகங்கள் அடங்கிய போஸ்டர்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.

‘முதல்வர் எங்க இருக்காரு? முதல்வரைச் சந்திக்காமல் செல்ல மாட்டேன்!’

கோட்டைக்கு குழந்தையுடன் வந்து பரபரப்பு ஏற்படுத்திய பெண்!

சென்னை, மே 23 – சென்னை சார்லஸ் நகரைச் சேர்ந்த கிரிஸ்டல் என்ற பெண் தனது குழந்தையுடன் தலைமை செயலகத்திற்கு வந்தார்.

அப்போது பாதுகாப்பு பணியில் இருந்த காவல்துறையினரிடம், தனது கணவரை புதுக்கோட்டை போலீசார் காரணமின்றி அழைத்து சென்றதாக கூறி, முதல்வரை நேரில் சந்தித்து புகார் அளிக்க விரும்புவதாக தெரிவித்தார்.

அவரை உள்ளே செல்ல அனுமதிக்காததால் கிரிஸ்டல் ஆவேசமடைந்தார். இதையடுத்து அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த காவலர்கள் அவரை தடுத்து நிறுத்தினர். இதனால் தலைமை செயலக வளாகத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

பின்னர் நிருபர்களிடம் பேசிய கிரிஸ்டல், ‘என் கணவரை யார் என்று கூட தெரியாத சிலர் புதுக்கோட்டை போலீசார் என கூறி வீட்டிலிருந்து இழுத்துச் சென்றனர்.

அவர் என்ன தவறு செய்தார், எதற்காக அழைத்து சென்றார்கள் என்ற எந்த தகவலும் சொல்லவில்லை. நான் கேட்டபோது என்னை தள்ளி இழுத்து தாக்கினர். என் ஆடைகளும் கிழிந்தன.

மேலும், நான் சிஎம் செல் மூலம் புகார் அளிக்கவும், முதல்வரை சந்திக்கவும் வந்தேன். ஆனால் காவல்துறையினர் என்னை அனுமதிக்காமல் தள்ளி இழுத்தனர். உடலிலும் காயங்களை ஏற்படுத்தியுள்ளனர். என் குழந்தை முன்னிலையிலேயே இந்த சம்பவம் நடந்தது.

இதற்குதான் போலீசாருக்கு சம்பளம் கொடுக்கப்படுகிறதா? நடுவீட்டில் என் குழந்தை முன்பு என்னுடைய கணவரை இழுத்து சென்றுள்ளனர்.

காவல் துறையினர் எந்த விதிகளையும் கடைபிடிக்காமல் அவர்கள் இஷ்டத்திற்கு ஏற்றவாறு நடந்து கொள்கின்றனர்.

இதை யெல்லாம் நான் முதல்வரிடம் தெரிவிக்க வேண்டும். ஆனால் என்னை காவலர்கள் பார்க்க அனுமதி மறுக்கின்றனர் என அவர் வேதனையுடன் தெரிவித்தார்.

பொறியியல் மாணவர் சேர்க்கை

ஜூன் 1ல் சான்றிதழ் சரிபார்க்கும் பணி தொடக்கம்!

சென்னை, மே 23 - பொறியியல் மாணவர் சேர்க்கையில், விளையாட்டுப் பிரிவு மாணவர்களுக்கான சான்றிதழ் சரிபார்க்கும் பணி ஜூன் 1 முதல் தொடங்க உள்ளது. அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கு மாணவர் சேர்க்கைக்கான ஆன்லைன் விண்ணப்பப் பதிவு கடந்த 3ம் தேதி முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. ஜூன் 2ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம். இணையவழி ஆவணச் சரிபார்ப்பு ஜூன் 8 அன்று தொடங்கி, ஜூன் 20 வரை நடைபெறும். அசல் சான்றிதழ்களை ஜூன் 6ம் தேதிக்குள் மாணவர்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

இந்நிலையில், விளையாட்டுப் பிரிவு இட ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பித்துள்ள மாணவ - மாணவிகளுக்கான அசல் சான்றிதழ்கள் சரிபார்க்கும் பணி வரும் ஜூன் 1 முதல் ஜூன் 9ம் தேதி வரை நடைபெற உள்ளதாக தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் தெரிவித்துள்ளது.

இந்த சான்றிதழ் சரிபார்ப்பு பணிகள் அனைத்தும் சென்னை கிண்டி அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள விவேகானந்தா அரங்கில் நடைபெறவுள்ளன.

விளையாட்டு பிரிவில் விண்ணப்பித்த தகுதியான மாணவர்கள் தங்களின் உரிய விளையாட்டு சான்றுகள் மற்றும் கல்வி ஆவணங்களுடன் குறிப்பிட்ட தேதிகளில் நேரில் கலந்துகொள்ள வேண்டும்.

மாணவர்கள் எந்த தேதிகளில் கலந்து கொள்ள வேண்டும் என்ற விவரம் தனிப்பட்ட மாணவர்களுக்குக் குறுஞ்செய்தியாக அனுப்பப்பட்டுள்ளது. கூடுதல் தகவல்களை தமிழ்நாடு பொறியியல் மாணவர் சேர்க்கையின் அதிகாரப்பூர்வ இணையதளமான www.tneaonline.org ல் சென்று மாணவர் தெரிந்து கொள்ளலாம்.

சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

போற்றுதலுக்குரிய கழகத் தலைவர் அவர்களின் அறிவிப்பின்படி நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பின்படி - சேலம் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்றத் தொகுதிகளுக்கு கீழ்க்கண்டவாறு கள ஆய்வு நடைபெறவுள்ளது. இதில் மூத்த வழக்கறிஞர் ஏ.சரவணன் மற்றும் நா.இளையராஜா ஆகியோர் பங்கேற்கிறார்கள்.

வ.எண்	நாள்	நேரம்	தொகுதி	இடம்
1.	25.05.2026 திங்கட்கிழமை	காலை 10.00 மணி	சேலம் தெற்கு தொகுதி	கலைஞர் மாளிகை, மாவட்ட தி.மு.க அலுவலகம், சேலம்.
2.	26.05.2026 செவ்வாய்கிழமை	காலை 10.00 மணி	சேலம் வடக்கு தொகுதி	கலைஞர் மாளிகை, மாவட்ட தி.மு.க அலுவலகம், சேலம்.
3.	27.05.2026 புதன்கிழமை	காலை 10.00 மணி	சேலம் மேற்கு தொகுதி	கலைஞர் மாளிகை, மாவட்ட தி.மு.க அலுவலகம், சேலம்.
4.	28.05.2026 வியாழக்கிழமை	காலை 10.00 மணி	ஓமலூர் தொகுதி	கலைஞர் மாளிகை, மாவட்ட தி.மு.க அலுவலகம், சேலம்.

அண்ணா அறிவாலயம்
சென்னை - 18
நாள் : 22.05.2026

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எஸ்.ஆர். முகிலன்
மே 23 (1999)

1954இல் கழக உறுப்பினராகி பின்னர், கோமல் கிளைக் கழகச் செயலாளர் – மயிலாடுதுறை வட்டக் கழக துணைச் செயலாளர் – வட்டக் கழகப் பொறுப்புச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

மயிலாடுதுறை பகுதியில் கழகம் வளர உழைத்தவர்களில் இவரும் ஒருவர்.

1962இல் விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் – 1965இல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் – மிசா கைதியாக ஒரு மாத சிறைவாசம்; மேலும் கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.